# தொட்டுவிடும் தொலைவில்...

சந்திரயான் - 3 என்பது சந்திரனின் மேற்பரப்பில் தரை இறங்குவதற்கான இந்தியாவின் இரண்டாவது முயற்சி மற்றும் அதனோடு சந்திரயான் திட்டத்தின் 3-ஆவது பகுதியாகும். நிலவைத் தொடுகிற அந்த நிகழ்வுதான் நம் இதய நிமிடங்களை இழுத்துச் செல்கிறது. சந்திரயான் - 3 விண்கலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து எல்.வி.எம்.- 3 ராக்கெட் மூலம் விண்ணில் ஏவப்பட்டது. இது விஞ்ஞான வளர்ச்சியில் இந்தியாவின் ஆகச்சிறந்த பணிகளில் ஒன்று.

விண்கலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்கலத்தில் இருந்து ஏவுகணை வாகனம் மார்க் 3-இல் புறப்பட்டபோது, விஞ்ஞான உலகத்துக்கும், இந்திய மக்களுக்கும் ஒரு புத்தெழுச்சியை ஏற்படுத்தியது. ரூ. 615 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்ட சந்திரயானின் மகத்தான இந்தக் கனவு நிலவைத் தொடுகிறபோது நனவாகும்.



முனைவர் வைகைச்செல்வன்

**நிலவின் மேற்பரப்பில் விண்கலத்தை தரையிறக்கும் முயற்சியில் இதுவரை 3 நாடுகள் மட்டுமே வெற்றி பெற்றுள்ளன. இவை அமெரிக்கா, ரஷியா மற்றும் சீனா ஆகிய நாடுகள்தான். இந்தச் சாதனை சரித்திரத்தில் நிலையான தன் பெயரை எழுதிக்கொள்ள நமது இந்தியா தயாராகியுள்ளது.**

லேண்டரின் சாய்வுதளம் வழியே இறங்கி நிலவின் தரையில் தடம் பதிக்கும் ரோவர் தனது வேலையைத் தொடங்குவதே நிறைவான நிகழ்வு. இப்படி கச்சிதமாகச் செயல்பட்டால் நிலவைத் தொட்டுவிடலாம். உலகத்தை இந்தியா வென்றுவிடலாம்.

கட்டுரையாளர்:
**முன்னாள் அமைச்சர்.**

# தெற்கு ரயில்வே சென்னை கோட்ட மேலாளர் பொறுப்பேற்பு



பி.விஸ்வநாத் ஈர்யா

**சென்னை, ஜூலை 20:** தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்ட புதிய மேலாளராக பி. விஸ்வநாத் ஈர்யா வியாழக்கிழமை (ஜூலை 20) பொறுப்பேற்றுக் கொண்டார்.

சென்னை கோட்ட மேலாளராக பணியாற்றிய கணேஷுக்குப் பதிலாக விஸ்வநாத் ஈர்யா நியமிக்கப்பட்டுள்ளார். இந்திய ரயில்வே பொறியாளர் தேர்வில் 1992-ஆம் ஆண்டு தேர்வான இவர், ரயில்வேயின் பல்வேறு துறைகளில் பணியாற்றியுள்ளார். முன்னதாக, நாந்தேட் ரயில்வே கோட்ட கூடுதல் மேலாளராகவும், தென் மத்திய ரயில்வேயின் தலைமைப் பொறியாளராகவும் (கட்டுமானப் பிரிவு) பணியாற்றியுள்ளார்.

இவர் அடுத்த இரு ஆண்டுகளுக்கு சென்னை கோட்ட ரயில்வே மேலாளராக பணியாற்றுவார் என்று கூறப்படுகிறது.

# 4-ஆவது புவி சுற்றுப் பாதைக்குள் சந்திரயான்-3!

**சென்னை, ஜூலை 20:** நிலவை நோக்கிப் பயணித்து வரும் சந்திரயான்-3 விண்கலம், புவி வட்டத்தின் 4-ஆவது சுற்றுப்பாதைக்குள் வெற்றிகரமாக வியாழக்கிழமை செலுத்தப்பட்டது.

அடுத்த 10 நாள்களில் நிலவின் வட்டப் பாதைக்குள் சந்திரயான்-3 புதிய பயணத்தைத் தொடங்கும் என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

நிலவின் தென் துருவத்துக்கு மிக அருகில் தரையிறங்கி ஆய்வு செய்வதற்காக சந்திரயான்-3 விண்கலத்தை ரூ.615 கோடியில் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) வடிவமைத்து, எல்விஎம்-3 ராக்கெட் மூலம் கடந்த 14-ஆம் தேதி விண்ணில் செலுத்தியது.

குறைந்தபட்சம் 170 கி.மீ. தொலைவும், அதிகபட்சம் 36,500 கி.மீ. தொலைவும் கொண்ட புவி நீள்வட்ட சுற்றுப்பாதையில் விண்கலம் நிலைநிறுத்தப்பட்டது.

அதைத் தொடர்ந்து பெங்களூரில் உள்ள இஸ்ரோவின் கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து விண்கலத்தின் சுற்றுப் பாதையை உயர்த்தும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் சந்திரயான்-3 விண்கலத்தின் சுற்றுப்பாதை தொலைவு நான்காவது முறையாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இஸ்ரோ வெளியிட்ட அறிவிப்பு:

சந்திரயான்-3 விண்கலம் புவிக்கு அருகே ஒவ்வொரு முறை சுற்றிவரும் போதும் அதிலுள்ள உந்து விசை இயக்கப்பட்டு சுற்றுப்பாதை தொலைவு படிப்படியாக அதிகரிக்கப்படும்.

அந்த வகையில், விண்கலத்தின் சுற்றுவட்டப்பாதை தொலைவு தற்போது நான்காவது முறையாக வியாழக்கிழமை மதியம் 2-இல் இருந்து 3 மணிக்குள் அதிகரிக்கப்பட்டது.

அடுத்தகட்டமாக சந்திரயான்-3 பயணப் பாதை ஜூலை 25-ஆம் தேதி மாற்றியமைக்கப்படும். அதன் பின்னர் ஆகஸ்ட் 1-இல் புவிவட்டப் பாதையில் இருந்து விலகி விண்கலம் நிலவின் வட்டப் பாதைக்குள் பயணிக்கும் என்று அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 8 சிவிங்கிப் புலிகள் இறப்புக்கான காரணம் என்ன?

## பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்ய மத்திய அரசுக்கு உத்தரவு

**புது தில்லி, ஜூலை 20:** மத்திய பிரதேசத்தின் குனோ தேசிய பூங்காவில் 8 சிவிங்கிப் புலிகள் (சீட்டா) அடுத்தடுத்து இறந்த நிலையில், இது குறித்து உச்சநீதிமன்றம் கவலை தெரிவித்துள்ளது.

சிவிங்கிப் புலிகளின் இறப்புக்கான காரணங்கள் குறித்து விரிவான பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்ய மத்திய அரசுக்கு உத்தரவிட்ட உச்சநீதிமன்றம்,'இந்த விவகாரத்தில், கௌரவப் பிரச்னை வேண்டாம்' என்றும் அறிவுறுத்தியது.

இந்தியாவில் அழிந்துபோன இனமான சிவிங்கிப் புலிகளை மீண்டும் அறிமுகப்படுத்தும் மத்திய அரசின் லட்சியத் திட்டத்தின்கீழ், நமீபியாவில் இருந்து 8 சிவிங்கிப் புலிகளும் (5 பெண், 3 ஆண்), தென்னாப்பிரிக்காவில் இருந்து 12 சிவிங்கிப் புலிகளும் (7 ஆண், 5 பெண்) கொண்டுவரப்பட்டு, குனோ தேசியப் பூங்காவில் விடப்பட்டன.

இதில், 2 பெண் சிவிங்கிப் புலிகளும், 3 ஆண் சிவிங்கிப் புலிகளும் அடுத்தடுத்து இறந்தன. குனோ தேசிய பூங்காவில் ஒரு பெண் சிவிங்கிப் புலி, 4 குட்டிகளை ஈன்றிருந்தது. அதில் 3 குட்டிகள் இறந்தன.



இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட ஓராண்டுக்குள் 8 சிவிங்கிப் புலிகள் உயிரிழந்தது, மத்திய அரசின் திட்டத்துக்கு பின்னடைவாக பார்க்கப்படுகிறது.

குனோ தேசிய பூங்காவில் இருந்து ராஜஸ்தான் உள்ளிட்ட வேறு மாநில வனப் பூங்காக்களுக்கு சிவிங்கிப் புலிகளை இடமாற்றம் வேண்டும் என்ற கருத்து, துறைசார் நிபுணர்கள் தரப்பில் முன்வைக்கப்பட்டுவருகிறது.

இந்நிலையில், இந்த விவகாரம் குறித்து கடந்த மே மாதம் நடைபெற்ற விசாரணையின்போது, 'மத்திய அரசு அரசியலுக்கு அப்பாற்பட்டு செயல்பட வேண்டும்; சிவிங்கிப் புலிகளை ராஜஸ்தானுக்கு மாற்றுவது குறித்து பரிசீலிக்க வேண்டும்' என்று உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியிருந்தது.

ராஜஸ்தானில் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்று வரும் நிலையில், உச்சநீதிமன்றம் மேற்கண்ட கருத்தை தெரிவித்திருந்தது. இந்நிலையில், நீதிபதி பி.ஆர்.கவாய் தலைமையில் நீதிபதிகள் ஜே.பி.பர்திவாலா, பிரசாந்த் குமார் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வு முன் வியாழக்கிழமை மீண்டும் விசாரணை நடைபெற்றது.

அப்போது, மத்திய அரசுக்கு பல்வேறு கேள்விகளை எழுப்பி, நீதிபதிகள் கூறியதாவது: 24 சிவிங்கிப் புலிகளில் 8 சிவிங்கிப் புலிகள் இறந்துள்ளன.

பருவநிலை ஒத்துக்கொள்ளவில்லையா? அல்லது வேறென்ன காரணம்? சிவிங்கிப் புலிகளை வேறு பூங்காக்களுக்கு மாற்றுவது குறித்து ஆராயாதது ஏன்?

இந்த விவகாரத்தை கௌரவப் பிரச்னை ஆக்காமல், மத்திய அரசு நேர்மறையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சிவிங்கிப் புலிகளை ராஜஸ்தான் உள்ளிட்ட வேறு பூங்காக்களுக்கு மாற்றுவதற்கான சாத்தியக்கூறு குறித்து பரிசீலிக்க வேண்டும் என்றனர்.

அப்போது, மத்திய அரசுத் தரப்பில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஐஸ்வர்யா பாட்டீ, 'சிவிங்கிப் புலிகள் மறுஅறிமுகத் திட்டம் மத்திய அரசின் மதிப்புமிக்க திட்டமாகும்; சிவிங்கிப் புலிகளை இடமாற்றுவது உள்பட பல்வேறு வாய்ப்புகள் குறித்து அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர். இறப்புகளை தடுக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன' என்றார்.

'மதிப்புமிக்க திட்டமென கூறினாலும், நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட ஓராண்டுக்குள் கிட்டத்தட்ட 40 சதவீத சிவிங்கிப் புலிகள் இறந்தது, இந்தத் திட்டத்துக்கான நல்ல நிகழ்வாக இல்லை' என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

மேலும், சிவிங்கிப் புலிகள் இறப்புக்கான காரணங்கள், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஜூலை 29-ஆம் தேதிக்குள் விரிவான பிரமாண பத்திரம் தாக்கல் செய்ய மத்திய அரசுக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், அடுத்தகட்ட விசாரணையை ஆகஸ்ட் 1-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

## மணிப்பூரில் பெண்கள் மீதான பாலியல் கொடூரம்

# முடங்கியது நாடாளுமன்றம்

**புது தில்லி, ஜூலை 20:** நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் வியாழக்கிழமை தொடங்கிய நிலையில், மணிப்பூர் வன்முறை குறித்து விவாதம் கோரி எதிர்க்கட்சிகள் கடும் அமளியில் ஈடுபட்டன. இதனால், தொடங்கிய முதல் நாளிலேயே இரு அவைகளும் ஒத்திவைக்கப்பட்டன.

விவாதத்துக்கு தயாரென மத்திய அரசு உறுதியளித்தபோதிலும், பிரதமர் மோடி விளக்கமளிக்க வேண்டும் என்பதில் எதிர்க்கட்சிகள் தீர்மானமாக உள்ளன.

மணிப்பூர் கலவரத்தில், பழங்குடியின பெண்கள் இருவர் ஆடைகளின்றி, ஊர்வலமாக இழுத்துச் செல்லப்பட்ட கொடூர சம்பவம் குறித்த விடியோ வெளியாகி நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள நிலையில், நாடாளுமன்றம் வியாழக்கிழமை கூடியது.

'மணிப்பூர் நிலவரம் குறித்து விவாதம் நடத்தப்பட வேண்டும்; இந்த விவகாரத்தில் பிரதமர் மோடி விளக்கமளிக்க வேண்டும்' என்ற கோரிக்கையை இரு அவைகளிலும் எதிர்க்கட்சிகள் வலுவாக முன்வைத்தன.

'மணிப்பூர் பற்றி எரிகிறது' என்ற முழக்கத்துடன், எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அமளியில் ஈடுபட்டதால், இரு அவைகளும் நாள் முழுவதும் முடங்கின.

**மக்களவையில்...:** மக்களவை அதன் தலைவர் ஓம் பிர்லா தலைமையில் கூடியதும், அண்மையில் மறைந்த எம்.பி.க்கள் ரத்தன் லால் கட்டாரியா, சுரேஷ் நாராயண் தனோர்கர் மற்றும் மறைந்த முன்னாள் எம்.பி.க்கள் 11 பேருக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

அப்போது, பிரதமர் நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், காங்கிரஸ் மூத்த தலைவர்கள் சோனியா காந்தி, அதீர் ரஞ்சன் சௌதரி உள்ளிட்டோர் அவையில் இருந்தனர். இரங்கல் நிகழ்வைத் தொடர்ந்து, அவை 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

பின்னர் அவை கூடியபோது, மணிப்பூர் நிலவரம் குறித்து விவாதம் கோரி, எதிர்க்கட்சி எம்.பி.க்கள் முழக்கமிட்டனர். 'அவைக்கு பிரதமர் வந்து விளக்கமளிக்க வேண்டும்' என்று அவர்கள் வலியுறுத்தினர்.

**'அமித் ஷா விளக்கமளிப்பார்':** அமளிக்கு இடையே பேசிய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி, 'மணிப்பூர் விவகாரம் குறித்து விவாதிக்கத் தயார் என மத்திய அரசு ஏற்கெனவே தெளிவாக கூறிவிட்டது. மக்களவை பாஜக குழு துணைத் தலைவர் ராஜ்நாத் சிங்கும் இதே உறுதிமொழியை அளித்துள்ளார். விவாதத்தின்போது, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா விரிவாக பதிலளிப்பார்' என்றார்.

அவரது பதிலால் அதிருப்தியடைந்த எதிர்க்கட்சி எம்.பி.க்கள், தொடர்ந்து கோஷமிட்டனர். அப்போது, மக்களவையை வழிநடத்திய எம்.பி. கிரித் சோலங்கி, அவையை நாள் முழுக்க ஒத்திவைப்பதாக அறிவித்தார்.



மக்களவையில் மணிப்பூர் வன்முறை விவகாரத்தை எழுப்பிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள்.

**மாநிலங்களவையில்...:** மாநிலங்களவை வியாழக்கிழமை காலை கூடியதும், அண்மையில் மறைந்த எம்.பி.யும் பாஜக மூத்த தலைவருமான ஹர்த்வார் துபேக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டு, அவை அலுவல்கள் ஒருமணி நேரம் ஒத்திவைக்கப்பட்டன.

பின்னர் அவை கூடியபோது, விதி எண் 267-இன்கீழ், அனைத்து அலுவல்களையும் ஒத்திவைத்துவிட்டு, மணிப்பூர் விவகாரம் குறித்து விவாதிக்க எதிர்க்கட்சிகள் தரப்பில் 8 நோட்டீஸ்கள் அளிக்கப்பட்டன.

ஆனால், மணிப்பூர் விவகாரம் குறித்து சுருக்கமான விவாதம் நடத்தும் வகையில், எதிர்க்கட்சிகளின் நோட்டீஸ்களை ஏற்பதாக மாநிலங்களவைத் தலைவர் ஜகதீப் தன்கர் தெரிவித்தார்.

அதையேற்க மறுத்து பேசிய மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, 'விதி எண் 267-இன்கீழ் அனைத்து அலுவல்களையும் ஒத்திவைத்துவிட்டு விவாதம் நடத்தப்பட வேண்டும்; பிரதமர் அவைக்கு வந்து விளக்கமளிக்க வேண்டும்' என்று வலியுறுத்தினார். இக்கோரிக்கையை வலியுறுத்தி, எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கோஷமிட்டதால், அவை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

**திரைப்பட ஒளிப்பதிவு சட்டத் திருத்த மசோதா:** மீண்டும் அவை கூடியதும், திரைப்பட ஒளிப்பதிவு சட்டம்-1952-இல் திருத்தங்கள் மேற்கொள்வதற்கான மசோதாவை அவையில் அறிமுகப்படுத்தும் முன்மொழிவை, மத்திய செய்தி மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அனுராக் தாக்குர் கொண்டுவந்தார்.

ஆனால், 'மணிப்பூர், மணிப்பூர்' என்ற முழக்கத்துடன் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அமளியில் ஈடுபட்டனர். அவர்களை சமாதானப்படுத்த ஜகதீப் தன்கர் மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்காத நிலையில், அவையை நாள்முழுக்க ஒத்திவைத்தார்.

மணிப்பூரில் பெரும்பான்மையாக உள்ள மைதேயி சமூகத்தினர், தங்களுக்கு பழங்குடியினர் அந்தஸ்து கோரும் நிலையில், அதற்கு குகி பழங்குடியினர் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். இந்தப் பிரச்னையில், இரு சமூகத்தினருக்கும் இடையே கடந்த மே மாதத்தில் இருந்து மோதல்கள் நிகழ்ந்து வருகின்றன. வன்முறையில் இதுவரை 160-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துவிட்டனர்.

'ஆளும் பாஜகவின் பிளவுபடுத்தும் அரசியலே, மணிப்பூர் பற்றி எரிய காரணம்' என்பது எதிர்க்கட்சிகளின் முக்கிய குற்றச்சாட்டாக உள்ளது.